இனிமையான குழந்தைகளே! இந்த சங்கமயுகமானது பிராமணர்களின் உலகமாக இருக்கின்றது. இதில் நீங்கள் பிரம்மாவின் குழந்தைகளாக ஆகியிருக்கின்றீர்கள். நீங்கள் எல்லையற்ற தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைய வேண்டும் மற்றும் அனைவருக்கும் கொடுக்க வேண்டும்.

கேள்வி: இந்த ஞானத்தை நல்ல முறையில் புரிந்து கொள்வதற்கு எப்படிப்பட்ட புத்தி தேவை?

பதில்: வியாபார புத்தியுடையவர்களே இந்த ஞானத்தை நல்ல முறையில் புரிந்து கொள்ள முடியும். இது எல்லையற்ற வியாபாரமாகும். தந்தை குழந்தைகளுக்கு வித விதமாக வருமானத்திற்கான யுக்திகளைக் கூறிக் கொண்டிருக்கின்றார். குழந்தைகளின் வேலை முயற்சி செய்வதாகும். சுயத்திற்கும் வருமானம் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும், பிற அனைவருக் கும் கூட நன்மை ஏற்பட வேண்டும். அம்மாதிரி யுக்தியினை உருவாக்குங்கள். தந்தையின் நினைவு மற்றும் சேவையே வருமானத்திற்கான சாதனமாகும்.

பாடல்: இரவு பயணிகளே களைப்படைந்து விடாதீர்கள் ....... ஓம் சாந்தி.

பரலௌகீக தந்தை குழந்தைகளுக்காக புரிய வைத்துக் கொண்டிருக்கின்றார், குழந்தை களே! தங்களது பரலௌகீக பரம்பிதா பரமாத்மாவாகிய என்னை மறந்து விடாதீர் கள் என்று கூறுகின்றார். கீதையின் பகவான் என்று பாடப்பட்டிருக்கின்றது. பைபிளின் பகவான் அல்லது குரானின் பகவான் என்று ஒருபொழுதும் யாரும் கூற மாட்டார்கள். தர்மத்தை ஸ்தாபனை செய்யும் யாரும் இவ்வாறு கூறுவதில்லை - ஏ, குழந்தைகளே! இப்பொழுது பரலௌகீக தந்தை யாகிய என்னை நினைவு செய்யுங்கள். இவ்வாறு யாரும் யாருக்கும் கூற முடியாது. குழந்தை பிறக்கின்றது, தந்தையை அறிந்து கொள்கின்றது. தந்தையையே நினைவு செய்து கொண்டி ருப்பார், ஏனெனில் வாரிசாக இருக்கின்றார். இப்பொழுது பரலௌகீக தந்தை கூறுகின்றார் - ஏ, என்னுடைய செல்லமான குழந்தைகளே! இப்பொழுது நீங்கள் என்னிடத்தில் வர வேண்டும். குழந்தைகளாகிய உங்களை பரந்தாமம், நிர்வாண தாமத்திற்கு அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கின்றேன். பக்தர்களாகிய நீங்கள் பகவானாகிய என்னை நினைவு செய்தீர்கள். இப்பொழுது நான் கூறுகின்றேன் - நீங்கள் என்னை நிரந்தரமாக நினைவு செய்யுங்கள். நான் உங்களை சுகதாமத்திற்கு அழைத்துச் செல்கின்றேன். தனது உள்ளத்தை சோதித்துப் பாருங்கள் - நீங்கள் அரை கல்பத்திற்கு எவ்வளவு துக்கம் அடைந்தீர்கள்! முதலிலேயே இந்த அளவிற்கு துக்கம் அடைவதில்லை. பின் நாட்களில் துக்கமானது அதிகரிக்கின்றது. இப்பொழுது பரலௌகீக தந்தை கூறுகின்றார் - என்னை நினைவு செய்யுங்கள். அனைத்து தர்மத்தினருக்கும் கூறுகின்றார் - ஏ, எனது குழந்தைகளே! நீங்கள் தங்களை சகோதரன், சகோதரன் என்று நினைத்து வந்தீர்கள். இப்பொழுது அனைத்து ஆத்மாக்களுக்கும் பரலௌகீக தந்தை, துக்கம் வருகின்ற பொழுது அனைத்து ஆத்மாக்களும் யாரை நினைவு செய்கின்றார்களோ அவர் இப்பொழுது பிரம்மாவின் கமலவாயின் மூலமாக குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைத்துக் கொண்டிருக்கின்றார். பிரம்மா வாய்வழி வம்சத்தினர் புரிய வைக்கப்படுகின்றனர். பிரஜாபிதா பிரம்மாவிற்கு குமாரிகள் மட்டுமின்றி, குமார, குமாரிகள் இருவரும் இருந்தனர். பிரம்மா குமார் குமாரிகள்

சகோதர, சகோதரிகளாக இருந்தனர். ஒரே தந்தையின் குழந்தைகள் ஒரே ஒரு தாத்தாவின் பேரன் பேத்திகளாக இருக்கின்றனர். குழந்தைகளாகிய உங்களுக்கு எதிரில் புரிய வைக்கப்படுகின்றது. நீங்கள் எதிரில் கேட்கின்றீர்கள். நாம் அனைவரும் நிராகார சிவபாபாவின் குழந்தைகளாக இருக்கின்றேன் என்று நினைக்கின்றீர்கள். உண்மையில் நாம் பிரம்மாவின் மூலமாக சிவபாபாவிடமிருந்து சொர்க்க ராஜ்ஜியத்தை அடைவதற்காக இராஜயோகத்தைக் கற்றுக் கொண்டிருக்கின்றோம். பரம்பிதா பரமாத்மா பிரம்மாவின் வாயின் மூலமாக எதைப் புரிய வைக்கின்றாரோ அதனை மற்றவர்களுக்கும் புரிய வைக்க வேண்டும். லௌகீக சகோதர சகோதரிகளுக்கும் புரிய வைக்க வேண்டும். நீங்கள் பரலௌகிகமானவர் களாக ஆகிவிட்டீர்கள். பரலௌகீக தந்தையிடமிருந்து நீங்கள் ஆஸ்தியை அடை கின்றீர்கள். நீங்கள் பரலௌகீக சகோதர சகோதரிகள் என்று அழைக்கப்படுகின்றீர்கள். அவர்கள் லௌகீக சகோதர சகோதரிகளாக இருக்கின்றனர். ஆக, தந்தை புரிய வைக்கின்றார் - குழந்தைகளே, 5000 ஆண்டிற்கு முன்பு போன்று நீங்கள் புத்தியின் யோகத்தை ஏற்படுத் தினால் உங்களது விகர்மங்கள் விநாசம் ஆகிவிடும். பாவங்கள் அழிந்து விடும். தந்தையின் நினைவையே யோக அக்னி என்று கூறப்படுகின்றது. இந்த சர்வ சக்திவானின் நினைவில் இருப்பதன் மூலமாக உங்களுக்கு சக்தி கிடைக்கும். அவர் ஒரே ஒரு நிராகார தந்தையாக இருக்கின்றார், இந்த பிரம்மாவின் மூலமாகக் கூறுகின்றார். கண்டிப்பாக ரதம் தேவையல்லவா! அந்த ரதத்தின் மூலமாக அவர் சவாரி செய்கின்றார். இவர் ரதமாக இருக்கின்றார், இந்த ரதத்தில் பரம்பிதா பரமாத்மா சவாரி செய்து குழந்தைகளுக்கு இதனைக் கற்றுக் கொடுக் கின்றார். இந்த உலகின் முதல், இடை, கடைக்கான ஞானத்தைக் கொடுக்கின்றார். இதன் மூலமாக நீங்கள் எதிர்காலத்தில் சக்கரவர்த்தி இராஜா இராணிகளாக ஆகி விடுவீர்கள். மேலும் நிரந்தரமாக நினைவு செய்வதன் மூலமாக விகர்மாஜீத் ஆகிவிடுவீர்கள், பாவனமான புண்ணிய ஆத்மா ஆகிவிடுவீர்கள். தந்தை ஸ்தாபனை செய்யும் சொர்க்கத்தில் நீங்கள் மகாராஜா, மகாராணிகளாக ஆவீர்கள். அதுவும் 21 பிறவிகளுக்கு. மேலும் பாரதத்தில் சிவஜெயந்தி, ஹோலி, ராக்கி, கிருஷ்ண ஜெயந்தி, தீபாவளி போன்ற எந்த விழாவாக இருந்தாலும் அனைத்து விழாக்களின் மகத்துவம் மற்றும் ஒவ்வொன்றின் சரித்திரத்தை நான் உங்களுக்குக் கூறுகின்றேன். சகோதர சகோதரிகளே வாருங்கள்! நாங்கள் உங்களுக்கு பரலௌகீக தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்கின்றோம். அறிமுகத்தை அடைந்து எளிய இராஜயோகத்தைக் கற்று நீங்கள் உலகிற்கு எஜமானர்களாக ஆவீர்கள். உலகின் சர்வசக்தி வாய்ந்த, தூய்மை, சுகம், சாந்தி நிறைந்த ஆடாத, அசையாத இராஜ்யத்தை செய்வீர்கள். இதனை மற்றவர்களுக்குப் புரிய வைப்பது மிகவும் எளிதாகும். இந்த மாதிரியாகவும் எழுத வேண்டும். தந்தையினால் புரிய வைக்கப்பட்ட இந்த ரகசியத்தை நாங்கள் உங்களுக்கு புரிய வைப்போம். தந்தையின் குழந்தைகளாக ஆகும் பொழுது தான் ஆஸ்தி கிடைக்கும் அல்லவா! நீங்களும் எல்லையற்ற தந்தையிடமிருந்து எல்லையற்ற ஆஸ்தியை வந்து அடையுங்கள். பல பிறவிகளாய் எல்லைக்குட்பட்ட ஆஸ்தியை அடைந்து வந்தீர்கள். அது துக்கத்திற்கான ஆஸ்தியாகும். ஏனெனில் இது இராவணனின் இராஜ்யமாக இருக் கின்றது. இராம இராஜ்யத்தில் சதா சுகம் இருந்தது. பிறகு மாயை இராவண இராஜ்யத்தில் நீங்கள் துக்கமானவர்களாக ஆகியிருக்கின்றீர்கள். இதனை நீங்கள் யாருக்கு வேண்டு மென்றாலும் புரிய

வைக்க முடியும். பொது நிகழ்ச்சிகளிலும் நீங்கள் புரிய வைக்க முடியும். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான். பிறகு பிரம்மா, விஷ்ணு, சங்கர், பிறகு அவர்களது மகிமைகளாகும். பிரம்மாவின் மூலமாக படைப்பு என்று புகழ் பாடப் பட்டிருக்கின்றது. ஆக அவர் கண்டிப்பாக ஸ்தூல உலகில் இருப்பார். பிராமணர்கள் பிரம்மாவின் குழந்தை களாக இருக்கின்றனர். அவரையே பிரஜாபிதா பிரம்மா என்று கூறப்படுகின்றது. முதன் முதலில் பிராமண குலம் தேவை. உயர்ந்ததிலும் உயர்ந்தது பிராமண வர்ணமாகும். ஸ்தாபனை செய்வது யார்? பரம்பிதா பரமாத்மா. பிதாவின் குழந்தைகள் என்று அனைவரும் அழைக்கப் படுகின்றனர். பிரம்மாவின் மூலமாக இந்த பிரம்மாகுமார், குமாரிகளுக்கு வந்து கற்பிக்கின்றார். இந்த சங்கமயுகமானது பிராமணர்களின் உலகாக இருக்கின்றது. பிறகு ருத்ரபுரிக்குச் சென்று விஷ்ணுபுரிக்கு வருகின்றீர்கள். நிரந்தரமாக நினைவு செய்பவர்களே! முதன் முதலில் ருத்ர மாலையில் வருவார்கள். சூரியவம்ச, சந்திரவம்ச ராஜாக்களாக ஆகின்றீர்கள் அல்லவா! ஆக இந்த நேரத்தில் பரம்பிதா பரமாத்மாவின் மூலம் இராஜயோகத்தைக் கற்பதன் மூலம் இராஜ்ய பதவியை அடைகின்றீர்கள். தந்தை கூறுகின்றார் - நிரந்தரமாக தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள். புத்தியின் தொடர்பை என்னிடத்தில் செலுத்துங்கள். இது ஆன்மீக யாத்திரையாகும். பல பிறவிகளாக உலகீய யாத்திரைகள் செய்து வந்தீர்கள். இப்பொழுது தந்தை வந்து ஆன்மீக யாத்திரையைக் கற்றுக் கொடுக்கின்றார். தந்தையாகிய என்னை மற்றும் எங்கிருந்து நீங்கள் நடிப்பதற்காக வந்திருக்கின்றீர்களோ அந்த இனிய வீட்டை நினைவு செய்யுங்கள் என்று கூறுகின்றார். நீங்கள் வெள்ளையாக இருந்தீர்கள், உலகை இராஜ்யம் செய்தீர்கள். பிறகு காமச் சிதையில் அமர்ந்து கறுப்பாகி விட்டீர்கள். அழகானவரிலிருந்து அழுக்கானவர்களாக ஆகி விட்டீர்கள். பாரதம் மிகவும் அழகானதாக இருந்தது. சொர்க்கம் என்று பெயர் இருந்தது. இப்பொழுது நரகமாக இருக்கின்றதல்லவா! நீங்களே பூஜ்ய நிலையிலிருந்து பிறகு பூஜாரிகளாக ஆகின்றீர்களெனில், உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் சிவன் பிரம்மா, விஷ்ணு, சங்கர் இவர்களின் மூலமாக காரியங்களைச் செய்விக்கின்றார். இவர்களை நிமித்தமாக ஆக்கு கின்றார். செய்பவர் செய்விப்பவரல்லவா! பிரம்மாவின் மூலமாகப் பாரதத்தை சொர்க்கமாக ஆக்குவதற்காக இராஜயோகத்தைக் கற்பிக் கின்றார். தந்தை கூறுகின்றார் - இந்த இராஜயோகத்தைக் கற்பித்து முடித்த பின்பு விநாசம் ஏற்பட்டு விடும். பிறகு யார் புது உலகை ஸ்தாபனை செய்கின்றார்களோ அவர்கள் அங்கு சென்று இராஜ்யம் செய்வார்கள். யார் எவ்வளவு முயற்சி செய்கின்றார்களோ - அனைத்திற்கும் ஆதாரம் முயற்சியாகும். கங்கையை பதீத பாவனி என்று கூறுகின்றனர். பிறகு பரமாத்மாவை - ஏ, பதீத பாவனனே வாருங்கள்! என்று ஏன் அழைக்கின்றீர்கள்? ஆக பூஜாரி பக்தர்களுக்கு பக்தியின் பலன் கிடைக்க வேண்டுமல்லவா! சொர்க்கத்தில் ஜீவன் முக்திக்கான பலன் கிடைக்கின்றது. மற்ற அனைவருக்கும் சாந்திக்கான பலன் கிடைக்கின்றது. சொர்க்கத்தில் சுகம், சாந்தி இரண்டும் இருந்தது. யாரெல்லாம் இராஜயோகத்தைக் கற்றிருந்தார்களோ அவர்கள் அனைவரும் சுகமானவர்களாக இருந்தனர். விகர்மங்களை விநாசம் செய்தே ஆக வேண்டும். கணக்கு வழக்குகள் முடிந்தே ஆக வேண்டும். பிறகு புது பாகத்தை ஏற்று நடிக்க வேண்டும். அனைவரின் கணக்கு வழக்கு களை முடித்து பாவனமாக்கி தந்தை தன் கூடவே அழைத்துச் செல்கின்றார். இவை யனைத்து

ரகசியங்களும் புரிந்து கொள்ள வேண்டியவைகளாகும்.

மனிதர்கள் பகவானை நினைவு செய்கின்றனர் எனில் கண்டிப்பாக பகவான் உலகிற்கு வர வேண்டியிருக்கும். உலகிற்கு வந்து பக்தர்களுக்கு பக்தியின் பலனைக் கொடுக்கின்றேன் என்று கூறுகின்றார். முக்தி அல்லது ஜீவன் முக்தி, அமைதி அல்லது சுகம் கொடுக்கின்றேன். உலகத்தினர் சுகம், சாந்தி அல்லது செல்வங்களை மட்டுமே கேட்கின்றனர். மனிதர்கள் செல்வத்தை அடைந்து செல்வந்தர்களாக ஆவதற்காகவே முயற்சி செய்கின்றனர். செல்வத்திலேயே சுகம் இருப்பதாக நினைக்கின்றனர். ஆனால் யாரிடத்தில் எவ்வளவு செல்வம் இருந்தாலும் இராஜ்யம் என்பது மாயையினுடையது அல்லவா! பதீத உலகமல்லவா! பாவம் கண்டிப்பாக ஏற்படும். செல்வத்திற்காக அதிகமான பாவங்களைச் செய்கின்றனர். இது பாவ ஆத்மாக்களின் உலகமாகும். இதில் புண்ணிய ஆத்மாக்கள் இருக்க முடியாது. புண்ணிய ஆத்மாக்களின் உலகில் பிறகு எந்த பாவ ஆத்மாக்களும் இருக்க முடியாது. இராஜா இராணியைப் போன்றே பிரஜைகளும் புண்ணிய ஆத்மாக்களாக இருப்பார்கள். இந்த பாவனமான தேவி தேவதைகளை பதீத உலகின் ராஜாக்களும் பூஜை செய்கின்றனர். ஏனெனில் இவர்கள் சர்வ குணங்கள் நிறைந்தவர்கள் என்று நினைக்கின்றனர். நமக்குள் எந்த குணங்களும் கிடையாது, நீங்கள் கருணை காண்பியுங்கள் ...... பிறகு நாமே பகவான்! என்றும் கூறுகின்றனர். பதீதமானவர்களை பாவனமாக ஆக்கக் கூடியவர் ஒரே ஒரு தந்தையாவார். பதீத பாவனன் என்று கூறியவுடனேயே புத்தியானது நிராகார பகவானிடத் தில் சென்று விட வேண்டும். நிராகார உபாசகர்களும் (வணங்குவோர்) இருக்கின்றனர் அல்லவா! ஆக அந்த நிராகார தந்தை உயர்ந்ததிலும் உயர்ந்தவராக இருக்கின்றார். அவரது அறிமுகம் முழுமையாக இல்லாத வரைக்கும் என்ன உபாசகம் செய்ய முடியும்? பரம்பிதா பரமாத்மா சிவன் என்று கூறுகின்றனர், நிரகார உபாசகர்கள் அல்லவா! அதாவது நிராகாரத்தை நினைவு செய்யக் கூடியவர்கள். ஆனால் அவர் யார்? அவரைப் பற்றிய முழு அறிமுகம் இருக்க வேண்டுமல்லவா! நிராகாரத்தை ஏன் நினைவு செய்கின்றனர்? அவரிடமிருந்து என்ன கிடைக்கும்? நிராகார உலகிற்கு செல்வீர்களா என்ன? ஆத்மாக்களுக்கு நிராகார உலகிற்குச் செல்வதற்கான வழி தெரியாது. முழு அறிமுகம் இல்லாமல் அனைவரும் நினைவு செய்கின்றனர். இந்த விதமாக நினைவு செய்வதன் மூலமாக யாரும் பாவனமாக ஆக மாட்டார்கள். இங்கு நிராகாரமானவர் சுயம் சாகாரத்தில் வருகின்றார். மனிதர்கள் நிராகார உலகிற்குச் செல்வதற்காக எவ்வளவு சாஸ்திரங்கள் போன்றவற்றை படிக்கின்றனர்! ஆனால் யாரும் செல்ல முடியாது. வழியும் தெரியாது. உலக யாத்திரைக்கான வழிகாட்டிகள் வழியை அறிந்திருப்பதால் அழைத்துச் செல்கின்றனர். மற்றவர்களுக்குக் கூறுமளவிற்கு இங்கு இந்த வழியை யாரும் அறிந்திருக்கவில்லை. ஆகையால் தான் முடிவற்றவர் (பே அன்த்) என்று கூறுகின்றனர். பிறகு எப்படி நினைவு செய்ய முடியும்? எதுவும் புரிந்து கொள்வதில்லை. முடிவற்றவர் என்று சிலர் கூறுகின்றனர், சிலர் நிராகாரமானவர் என்று கூறுகின்றனர். ஆக நிராகார உபாசிகள் அல்லவா! இன்றைய நாட்களில் நானே தான் அது என்றும் கூறி விடு கின்றனர். நாளுக்கு நாள் தமோ பிரதான வழிகள் ஏற்பட்டுக் கொண்டே செல்கின்றது. எது வருகின்றதோ அதனைக் கூறிக் கொண்டே இருக்கின்றனர். தந்தை புரிய வைக்கின்றார் - உயர்ந்ததிலும் உயர்ந்தவர் என்று தந்தைக்குப் பாடப்பட்டுள்ளது.

சர்வவியாபி என்று கூறுவதன் மூலமாக அனைவரும் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்களாக ஆகி விடுகின்றனர். இந்த அளவிற்கு பதீதமானவர், துக்கமானவர்கள் பிறகு எவ்வாறு உயர்ந்ததிலும் உயர்ந்தவர் களாக இருக்க முடியும்? பெயர், உருவத்திலிருந்து விடுபட்டவர் என்று ஒருபுறம் கூறு கின்றனர். பிறகு அவரை கல்லில், முள்ளில் இருக்கின்றார் என்று கூறுவது தர்ம நிந்தனை அல்லவா! நாமே பரமாத்மா என்று இப்பொழுது ஒரு சிலர் கூறுகின்றனர். எதுவெல்லாம் கடந்து முடிந்ததோ அவையனைத்தும் நாடகமாகும். அது மீண்டும் நடைபெறும். தவறுக்கு மேல் தவறு, நிந்தனைக்கு மேல் நிந்தனை செய்து செய்து பாரதம் இவ்வாறு பதீதமானதாக ஆகி விட்டது. தந்தையின் அறிமுகம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். இவ்வளவு பிரம்மா குமாரர்கள், குமாரிகளின் மூலமாக ஞானம் கிடைக்கின்றது என்று உங்களது பிரபாவம் வெளிப்படும். இது பரம்பிதா பரமாத்மா பற்றிய விசயமாகும். அனைவரையும் விட உயர்ந்த திலும் உயர்ந்தவர் பரம்பிதா பரமாத்மா, அவரது மகிமைக்கு எல்லையே கிடையாது. இப்பொழுது தந்தை வந்து தனது அறிமுகத்தைக் கொடுக்கின்றார்-நான் என்ன செய் கின்றேன்? நான் வந்து அனைத்து பாவ ஆத்மாக்களையும் புண்ணிய ஆத்மாக்களாக ஆக்குகின்றேன், இராஜயோகத்தைக் கற்பிக்கின்றேன். ஈஸ்வரனின் லீலைகள் தனிப்பட்டது என்றும் பாடப்பட்டிருக்கின்றது. ஆக கண்டிப்பாக அனைவரும் இங்கு வருவார்கள். அப்பொழுது தான் வழி காண்பிப்பார் அல்லவா! கிறிஸ்தவ தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்கு கிறிஸ்துவின் ஆத்மா வந்தது. தந்தையின் வழி பிற அனைத்தையும் விட தனிப்பட்டதாகும். இந்த தந்தை அனைவரையும் விட உயர்ந்தவர். பாரதத்தில் மனிதர்களில் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்களான தேவி தேவதைகள் இரட்டை கிரீடதாரிகளாக ஆகின்றனர். பகவானின் மகாவாக்கியம் - நான் உங்களுக்கு இராஜயோகத்தைக் கற்பிக்கின்றேன், இதனை வேறு யாரும் கற்பிக்க முடியாது. பகவானின் மகாவாக்கியம் என்று எழுதப்பட்டிருக்கின்றது. அவர் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக் கூடிய தந்தையாக இருக்கின்றார். சொர்க்கத்திற்காக பிராமணர்களாகிய உங்களுக்கு இராஜயோகத்தைக் கற்பிக்கின்றார். பிராமண வர்ணமானது அனைத்தையும் விட உயர்ந்ததாக ஆகி விட்டது. தந்தை சேவைக்கான யுக்திகளை அதிகமாகக் கூறுகின்றார். சிலர் திட்டினாலும் சரி, நீங்கள் சித்திரங்களை வைத்து விடுங்கள். இந்த வர்ணங்களில் பாரதம் மட்டுமே வருகின்றது என்று அதில் எழுதப்பட்டிருக்கும். இப்பொழுது கலியுகம், சூத்திர வர்ணம். பிறகு நீங்கள் தந்தையின் மூலமாக பிராமணர்களாக ஆகியிருக்கின்றீர்கள். உங்களது பெயரே பிரம்மா குமார், பிரம்மாகுமாரி. இந்த மாதிரியான சித்திரங்களை எங்கும் பார்க்கவில்லை என்று மனிதர்கள் ஆச்சரியப்படுமளவிற்கு உங்களது சித்திரங்கள் இருக்க வேண்டும். இந்த ஞானத்தை வியாபார புத்தியுடையவர்கள் நல்ல முறையில் புரிந்து கொள்ள முடியும். இந்த வியாபாரமும் நல்லதாக இருக்கின்றது. ஆக ஸ்ரீமத் கொடுக்கக் கூடியவர் அனைவரையும் விட உயர்ந்தவர். ஆனால் அதிக குழந்தைகள் முயற்சி செய்வதில்லை. வீட்டில் தூங்கிக் கொண்டிருப்பவர்களை தந்தை நிற்க வைக்கின்றார். நீங்கள் ஒரு சித்திரத்தை உருவாக்குவீர்கள் அதன் மூலமாக ஆயிரக்கணக்கானவர்களுக்கு நன்மை ஏற்படும், அனைவரும் அதிசயம் அதிசயம் என்று கூறுவார்கள். வந்தே மாதரம்! என்று கூறுவார். நல்லது.

இனிமையிலும் இனிய செல்லமான குழந்தைகளுக்கு, ஆன்மீக தாய், தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின்

நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) ருத்ர மாலையில் முதல் நம்பரில் வருவதற்காக நிரந்தரமாக தந்தையின் நினைவில் இருக்க வேண்டும். தந்தை மற்றும் இனிய வீட்டின் நினைவின் மூலம் தன்னை பாவனமாக்க வேண்டும்.

2) ஆன்மீக வழிகாட்டி ஆகி அனைவருக்கும் உண்மையான யாத்திரையை செய்விக்க வேண்டும். ஒரு தந்தையின் ஸ்ரீமத் மூலமாக தன்னை இரட்டை கிரீடதாரியாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

வரதானம்: சுய ஸ்திதியின் சக்தியின் மூலம் எந்த ஒரு பிரச்சனையையும் எதிர்கொள்ளக் கூடிய மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் ஆகுக.

சுய ஸ்திதி என்றால் ஆத்ம ஸ்திதி. பரஸ்திதி என்றால் மனிதன் அல்லது இயற்கையின் மூலம் வருகிறது. ஆனால் சுயஸ்திதி சக்திசா-யாக இருக்கிறது எனில் அதற்கு முன் பிரச்சனை என்பது ஒன்றுமே கிடையாது. சுயஸ்திதியில் உடையவர்கள் எந்த வகையான பிரச்சனையைப் பார்த்தும் பயப்பட முடியாது. ஏனெனில் ஞானம் நிறைந்த ஆத்மா ஆகிவிட்டார்கள். அவர் களுக்கு மூன்று காலம், அனைத்து ஆத்மாக்களின் ஞானம் இருக்கிறது. இவர் வசப்பட்டிருக் கின்றார் என்பதை அவர்கள் அறிவார்கள். ஆகையால் சுபபாவனை, சுப விருப்பத்தின் மூலம் அவர்களுக்கு சேவை செய்வார்கள், பயப்படமாட்டார்கள், சதா புன்சிரிப்புடன் இருப்பார்கள்.

சுலோகன்: பலவீனத்தைப் பற்றி பாடாமல் சதா பாக்கியத்தின் மகிமை பாடுகிறவர்களே பாக்கியவான் ஆவர்.